**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.928/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 2 |
| Name | : | வசந்த திலீப், 47 |
| Father Name/Husband Name | : | எட்வர்டு ராஜா |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | சத்தியபாமா தியேட்டர் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of June 2026.

**(A1 – A3 present).**

**<u>முதல் விசாரணை</u>**

1 நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து சத்தியபாமா தியேட்டரில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 நான் வேலை பார்க்கும் தியேட்டரில் வேலை பார்க்கிறார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சம்பவ காலத்தில் யார் அ.சா.1 யை அடித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. இவ்வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரப்பட்டு வழங்கப்பட்டு பிறழ் சாட்சியாக விசாரிக்கப்பட்டது)**

**<u>அரசு தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

2 கடந்த 30.03.2025 ஆம் தேதி 22.20 மணியளவில் கோவில்பட்டி சத்தியபாமா தியேட்டரில் படம் பார்க்க வரும் நபர்களை தியேட்டர் வாசலில் மதுஅருந்தி உள்ளார்களா என்று அ.சா.1 சோதனை செய்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் மூவரிடம் அ.சா.1 நீங்கள் மதுஅருந்தி உள்ளீர்கள் உள்ளே அனுப்ப முடியாது என்று அ.சா.1 கூறியதற்கு ஆஜர் எதிரிகள் அ.சா.1 யை தகாத வார்த்தைகளால் திட்டி அ.சா.1 யை சட்டையை பிடித்து கீழே தள்ளி நெஞ்சில் மிதித்து கையால்

இடது, வலது கன்னத்தில் மாறி மாறி அடித்து வலியை ஏற்படுத்தியதாகவும், அ.சா.1 க்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும், இந்த சம்பவம் குறித்து அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாகவும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு நீதிமன்றத்திற்கு வெளியே எதிரிகளிடம் சமாதானம் ஆகிவிட்டதால் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ் சாட்சியம் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court
in the presence of accused and
read over to the witness and
acknowledged by him/her to be
Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.